OS. 29/2022

**நாள். 04.06.2024.**

**வா.சா. 1 –** முராத் அலி த/பெ.சாலிபு

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்....

1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இந்த வழக்கை தாக்கல் செய்ய விவரங்களை நான் என் வழக்கறிஞரிடம் விவரங்களை சொன்னேன். பிரதிவாதிகள் அரை சென்டை ஆக்கிரமித்து வைத்துள்ளதால் பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன் பிரதிவாதிகளுக்கு நோட்டீஸ் அனுப்பினோம். சர்வே நம்பர்.66/ 2 பி க்கு வழக்கு தாக்கல் செய்துள்ளோம். சர்வே நம்பர்.66/ 2 பி ஆனது சர்வே நம்பர்.66/ 2 ல் இருந்து சர்வே நம்பர்.66/ 2 பி உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. சர்வே நம்பர்.66/ 2 ன் மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 35 சென்ட் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கின் வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தை வழக்கறிஞர் வரைந்தார் என்று சொன்னால் அதை நாங்கள்தான் சொன்னோம். இந்த வரைபடத்தில் உள்ளது போல் வழக்குச்சொத்து அமைந்திருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. செய்யது சுல்தானுக்கு சொத்து அவருடைய அப்பா மூலமாக கிடைத்தது. செய்யது சுல்தானின் அப்பா பெயரில் பட்டா ஏற்படவில்லை என்று சொன்னல் சரியல்ல. செய்யது சுல்தானுக்கு வழக்குச் சொத்தில் பாத்தியம் ஏற்படாதநிலையில் அவர் வழக்குச் சொத்தை அவருடைய மகனுக்கு 16.08.1973 ல் செட்டில்மெண்ட் எழுதி வைத்தது செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. அதன் அடிப்படையில் ஏற்பட்டதாக சொல்லப்படும் 30.07.1984 ல் ஏற்பட்ட RIPT பட்டா செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் Regular தாசில்தார் மூலம் பட்டா வழங்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதன் பின்னர் மேற்படி சொத்தை வாதிகள் பெயருக்கு 1994 ல் இனாம்செட்டில்மெண்ட் செய்து கொடுத்தார்கள். அந்த இனாம்செட்டில்மெண்ட் பத்திரமும் செல்லத்தக்கது அல்ல என்றும் அது பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளை

மோசடி செய்யும் எண்ணத்தில் 1994 செட்டில்மென்ட் பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையை படித்துப் பார்த்தேன். அந்த எதிர் வழக்குரைக்கு நான் பதில் உரை எதுவும் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்து 1935ல் ஏற்பட்ட பாகப்பிரிவினையின்படி முகம்மது இம்ராகிம்ஷா மற்றும் செய்யது இப்ராகிம் ஆகியோருக்கு பாகத்தில் கிடைக்கப்பெற்றது என்று சொன்னால் சரியல்ல. மேற்படியார்கள் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் முசாபர் கனிக்கு வழக்கு சொத்து அடங்கிய 8 ½ சென்ட் நிலத்தினை பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் மூலம் பாத்தியப்படுத்திவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு கிரையம் பெற்ற நாளிலிருந்து வழக்கு சொத்து பிரதிவாதிகளின் அனுபோகத்தில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. 8 ½ சென்ட் நிலமானது ஒரே வேலிக்குள் இருக்கிறது என்று சொன்னால் சரிதான். அவ்வாறு வேலி போடப்பட்டு அந்த சொத்து பிரதிவாதிகளின் அனுபோகத்தில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துக்கு தெற்கே பிரதிவாதிகள் புஞ்சை நிலம் இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல, அவர்களுடைய நஞ்சை நிலம் இருக்கிறது. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் வழக்குச் சொத்துக்கு தெற்கில் பிரதிவாதிகளின் புஞ்சை நிலம் இருப்பதாக சொல்லியிருப்பது தவறு என்று சொன்னால் சரிதான். வழக்குச் சொத்துக்கு மேற்கில் பிரதிவாதிகளின் வீடு இருக்கிறது. பிரதிவாதிகளின் வீட்டிலிருந்து வழக்கு சொத்துக்கு வந்துவிடலாம் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துக்கு வடக்கில் எங்களுடைய இடம் இருக்கிறது. வழக்கு சொத்துக்கு தெற்கில் குலபதம் குரூப் இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். குலபதம் குரூப் இடத்திற்கு வேறு கிராம நிர்வாக அலுவலர் உள்ளார் என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்தை அளப்பதற்கு வழக்கறிஞர் ஆணையரை நியமனம் செய்ய மனு போட்டோம். வழக்கறிஞர் ஆணையர் வழக்கு சொத்தை அளந்தபோது நாங்களும், பிரதிவாதிகள் தரப்பினரும் இருந்தோம். அப்படி அளக்கும்போது குலபதம் கிராம நிர்வாக அலுவலரோ, குலபதம் சம்பந்தப்பட்ட ஆவணங்களோ கொண்டுவரப்படவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா 2ம் இலக்க சொத்திற்கு வடக்கே ஊரணி உள்ளது என்று சொன்னால் சரியல்ல, வடக்கில் எங்கள் இடம் இருக்கிறது, கிழக்கில்தான் ஊரணி

இருக்கிறது.   தாவா 2ம் இலக்க சொத்திற்கு கிழக்கே பிரதிவாதிகளின் புஞ்சை நிலம் இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல, நஞ்சை நிலம்தான் இருக்கிறது.

(1 முதல் 6  பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)